இந்திய அரசு

புவிசார் அறிவியல் அமைச்சகம்

இந்திய வானிலைத் துறை

# செய்தி வெளியீடு

நாள் :13.01.2022

இந்திய அரசின் புவிசார் அறிவியல் அமைச்சகத்தின் சார்பில் சென்னை பள்ளிக்கரணையில் உள்ள தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள புதிய எக்ஸ் பேண்ட் வகை டாப்ளர் ரேடார் திறப்பு விழா **14.01.2022** அன்று நடைபெறுகிறது. புவிசார் அறிவியல் அமைச்சகத்தின் மத்திய அமைச்சர் மாண்புமிகு Dr. ஜிதேந்திர சிங் அவர்கள் இந்த ரேடாரை காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கிறார். தற்பொழுது சென்னை மற்றும் ஸ்ரீஹரிகோட்டாவில் இரண்டு எஸ் பேண்ட் வகை ரேடார்கள் உள்ள நிலையில் இந்த புதிய ரேடாரின் இயக்கம் சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் நிலவும் வானிலையை கண்காணிப்பதில் உதவிகரமாக இருக்கும். புதிய டாப்ளர் ரேடார் மூலம் சென்னையை மையமாகக் கொண்டு 150 கிமீ தொலைவு வரை நிகழ்கால வானிலையை கண்காணிக்க இயலும். இந்திய விண்வெளி கழக (இஸ்ரோ) விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்ட இந்த புதிய ரேடார் முழுமையாக உள்நாட்டிலேயே சென்னையில் உள்ள ‘டேட்டா பேட்டர்ன்’ நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டது. இந்திய விண்வெளிக் கழகம் , இந்திய வானிலைத் துறை மற்றும் தொழில் நிறுவனங்களில் பணி புரியும் விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் கடினமான கூட்டு முயற்சியால் உருவான இந்த நவீன வகை ரேடார் ‘ஆத்ம நிர்பார் பாரத்’ திட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் விளங்குகிறது.

